# செய்தி வெளியீடு

## அரியலூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் தூய்மை பாரத இயக்கம் குறித்த பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள்.

அரியலூர் மாவட்டத்திற்கு இன்று (20.09.2018) மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் **திரு.பன்வாரிலால் புரோகித்** அவர்கள் வருகைதந்து தூய்மை பாரத இயக்கம் குறித்த நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

அரியலூர் காமராஜர் திடலில் அரியலூர் நகராட்சியின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மற்றும் மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட விளக்கப் புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சியினை பார்வையிட்டார்கள்.

தொடர்ந்து தூய்மை இந்தியா குறித்த உறுதிமொழியினை **மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள்** வாசிக்க அவரைத்தொடர்ந்து மாணவ, மாணவிகளும், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உறுதிமொழி ஏற்றனர். மேலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (TNSRLM) செயல்பட்டு வரும் மகளிர் சுயஉதவிக்குழுவுக்கு, பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக துணி பைகள் தயாரிக்க ஓவர் லாக் தையல் இயந்திரமும், ரூ.2.20 இலட்சம் மதிப்பிலான வங்கி வரைவோலையையும், வழங்கினார்கள். பின்னர், பொதுமக்களின் பார்வைக்கு காமராஜர் திடலிலிருந்து அரியலூர் நகராட்சி வரைக்கும் செல்லும் தூய்மை பாரத இயக்க விழிப்புணர்வு ரதத்தினை **மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள்** கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர், சுகாதாரத்துறையின் சார்பில் ஐ.எம்.ஏ மஹாலில் இரத்தான முகாமினை துவக்கி வைத்து பார்வையிட்டு, கொடையாளர்களுக்கு பழங்கள் வழங்கி, பாராட்டினார்கள். தொடர்ந்து, காட்டுப்பிரிங்கியம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் இயங்கும் இ-சேவை (E-Service Center) மையத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களை பார்வையிட்டார்கள். காட்டுபிரிங்கியம் நியாயவிலைக்கடையின் மூலம் விநியோகிக்கப்படும் அரிசியின் தரத்தினை பார்வையிட்டார்கள்.

மேலும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரெட்டிபாளையத்தில் சேகரிக்கப்படும் குப்பையிலிருந்து மக்கும் குப்பை, மக்கா குப்பை என பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பையிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கப்படுவதை பார்வையிட்டு, மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள். தொடர்ந்து, ரெட்டிபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரியலூர், திருமானூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியங்களில் தூய்மை பாரதம் இயக்கம் சிறப்பாக செயல்படுத்திய சிறந்த ஊக்குநர்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்களையும், தூய்மை இந்தியா குறித்து மாவட்ட அளவில் பள்ளி மாணவ-மாணவிகளிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, ஓவியப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நினைவுப்பரிசுகளை வழங்கிப்பாராட்டினார்.

மேலும், அரசு விருந்தினர் மாளிகையில் அனைத்து அரசு அலுவலர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் இம்மாவட்டத்தின் வளர்ச்சிப்பணிகள் குறித்த விளக்கத் தொகுப்பினை (PowerPoint Presentation) மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

பின்னர், அரசு விருந்தினர் மாளிகையில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் **திரு.பன்வாரிலால் புரோகித்** அவர்கள் மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 237 மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆளுநர் அவர்களின் கூடுதல் தலைமைச்செயலாளர் திரு.ஆர்.இராஜகோபால், இஆப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.அபிநவ்குமார், இகாப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.ஜி.கே.லோகேஷ்வரி அவர்கள் ஆகியோர்கள் உட்பட அரசு அலுவலர்கள், மாணவ / மாணவிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

ராஜ்பவன், சென்னை -22 ஒம்/-

நாள் : 20.09.2018 இணை இயக்குநர் (ம.தொ)